மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 4—3—1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

152. தமிழ்நாடு 1970ஆம் ஆண்டு சந்தனக் கட்டை வைத் திருத்தல் விதிகள், தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு மரக்கட்டை அனுப்புகை விதிகள், தமிழ்நாடு 1967ஆம் ஆண்டு சந்தனக் கட்டை அனுப்புகை விதிகள் ஆகியவைகளில் திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக, வன-மீன் துறையின் 8—11—1982ஆம் தேதியிடப்பெற்ற 1501ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

153. மரக்கட்டை, ஏனைய வன உற்பத்திப் பொருள்களை அகற்றுவதற்காக விதிக்கப்படுகிற அரசின் பங்கை முறைப்படுத்தும் விதிகளைத் திருத்துவது சம்பந்தமாக, வன-மீன் துறையின் 6—1—1979ஆம் தேதியிடப்பெற்ற 17ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1882ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 26ஆவது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

154. தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு அமைச்சர்கள், சட்ட மன்ற அவைத் தலைவர்கள் (அரசு இல்லங்களில் பொருள் வசதி செய்தல்-பராமரித்தல் வசதிகளுக்கு வகை செய்தல்) விதிகள்; தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு அமைச்சர்கள், சட்ட மன்ற அவைத் தலைவர்கள் (தனியார் இல்லங்களில் பொருள் வசதி செய்தல்-பராமரித்தல் வசதிகளுக்கு வகை செய்தல்) விதிகள்; தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு அமைச்சர்கள் சட்ட மன்ற அவைத் தலைவர்கள் (குத்தகையின் பேரில் எடுத்துள்ள தனியார் இல்லங்களில் பொருள் வசதி செய்தல்-பராமரித்தல் வசதிகளுக்கு வகை செய்தல்) விதிகள் ஆகியவைகளில் திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக, பொதுத் (பணியாளர் அமைப்பு-1) துறையின் 29—10—1982ஆம் தேதியிடப்பெற்ற 1873ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் பேரவையில் வைக்கப்பெற்றது).

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1983 மார்ச் 3

155. 1925ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக, வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 19—11—1982ஆம் தேதியிடப்பெற்ற 1282ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 75ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

156. மாநிலத்திற்கு வெளியே மரக்கட்டைகளைக் கொண்டு செல்லத் தடை விதிப்பது சம்பந்தமாக வன-மீன் துறையின் 2—11—1982ஆம் தேதியிடப்பெற்ற 1455ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1949ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு, தேவைக் கோரிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1949) 2ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

157. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளைச் சேர்ந்த 35-ஏ (4) மற்றும் 36(1) விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக உள் துறையின் 27—8—1982 ஆம் தேதியிடப்பெற்ற 2237ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்படச் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

158. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டத்தில் கிராமான கிராமங்களாக சில கிராமங்களை அறிவிப்பது சம் பந்தமாக, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 10—12—1982ஆம் தேதியிடப்பெற்ற 1887ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பூமிதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

159. ஊராட்சி மன்றங்கள் விதிக்கும் வீட்டு வரியிலிருந்து புயல் பாதுகாப்பு இல்லங்களுக்கு விலக்களிப்பது தொடர்பான விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 2—11—1982ஆம் தேதியிடப்பெற்ற 1649ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199(2) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது.]

160. ஊராட்சிகள் அறிக்கை வெளியிடும் முறை தொடர் பான விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக, ஊர் வளர்ச்சி--உள்ளாட்சித் துறையின் 2—12—1982ஆம் தேதியிடப்பெற்ற அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958 199(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

1983 மார்ச் 3]

161. தமிழ் நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தில் திருத்தம் செய்வது சம்பந்தமாக கல்வி-அறிவியல்-தொழில் நுட்பத்துறையின் 31—3—1982ஆம் தேதியிடப் பெற்ற 575ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (குடியரசுத் தலைவரது சட்டம் எண். 10/1976) 54(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

162. ஆயத்துறை அதிகாரிகளுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பது குறித்த தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு (உரிமம்-அனுமதிச் சீட்டு விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக) மதுவிலக்கு-ஆயத்துறையின் 18—1—1982ஆம் தேதியிடப் பெற்ற 21ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 9/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

163. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமான மதுவிலக்கு-ஆயத்துறையின் 10—11—1982-ஆம் தேதியிடப் பெற்ற 788ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

164. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1980—81ஆம் ஆண்டிற்கான 16ஆவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்-தமிழ்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

39. ஓட்டல்கள், ரெஸ்டாரெண்டுகளில் உணவுப் பொருள்கள்-பான வகைகள் விற்பனை செய்வதன் பேரில் வரி வசூல் செய்வது குறித்த ஆணைகளைத் திருத்தியமைப்பது சம்பந்தமான வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 22—10—1982ஆம் தேதியிடப்பெற்ற 1187-ஆம் எண். அரசாணையில் வெளியான சட்டப்படிக்கல்லாத ஆணைகள்.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
7 - DEC 1983
MADRAS